அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# தீப நெறி

எல்லாம் செயல் கூடும்

தீபம் 7 நெறி 8 தமிழ் மாத இதழ் விலை ₹1 மார்ச் 2017


பட்டினியில்லா... வளமிக்க
நோயில்லா... வையகத்தை
குற்றமில்லா... வார்த்தெடுப்போம்!



தாயாகி தந்தையுமாய் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிகர் இல்லாத தனித்தலைமைத் தெய்வம்


எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க !!!

# வாயார வாழ்த்துகின்றோம்...



மாதந்தோறும் தீபம் அறக்கட்டளையின் ஆன்மநேய அறப்பணிகளுக்கு ரூ. 5000 அள்ளித்தரும்
மனிதநேய வள்ளல் சென்னை பெசன்ட்நகர் ஸ்ரீராம் செல்லப்பா அவர்களின் குடும்பத்தினரை
தீபம் வாயார வாழ்த்துகிறது

## " தீபநெறி " ஆசிரியர் குழு




**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர்
கைபேசி : 95518 49757



அன்பின் பிடியுள்
**அர. இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
தொலைபேசி :04172 273293
கைபேசி : 80564 38488



இலக்கியச்செல்வர்
**இளந்தேவன்**
அய்யப்பந்தாங்கல்
கைபேசி : 99400 92876



வள்ளலார் சிற்றடியேன்
**குருபக்கிரிசாமி**
ஆசிரியர் – அருட்சுடர்
வடலூர்
94428 12844



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி இதழ்
கைபேசி : 94440 73635



## தீபநெறி தொண்டர்களின் தினசரி தியானம்



ஆக்கம்
திரு. கே.என். உமாபதி அவர்கள்,
கே.கே. நகர்

தர்மம் தவம்



1. அறியாமை அடியோடு அகலட்டும்!
2. ஆன்ம நேயம் ஆல்போல் தழைக்கட்டும்
3. இல்லாமை இல்லாமல் புதையட்டும்!
4. ஈவது இயல்பாய் இருக்கட்டும்!
5. உயிரிரக்கம் எங்கும் தழைக்கட்டும் !
6. ஊக்கமுற்று யாக்கைகள் ஒளிரட்டும்!
7. எல்லா உயிர்களும் இன்புற்று வாழட்டும்!
8. ஏற்றத்தாழ்வு இடருற்றுப் போகட்டும்!
9. ஐம்பூதங்கள் மாசுபடுவதைத் தடுக்கட்டும்!
10. ஒன்றே இறையென உணர்த்தட்டும்!
11. ஓயாமல் வையகத்தில் அருட்பா ஒலிக்கட்டும்!
12. ஔடதமாம் அருட்பெருஞ்ஜோதி அற்புதங்கள் நடத்தட்டும்!

**தர்மம் செய்வோம் ! தயவுடன் வாழ்வோம் !**

நித்ய தீப தருமச்சாலை எண்.7/8 புத்தேரிக்கரை தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை– 600 042.

# அவரவர் விருப்பம்

"முச்சுடராதியால் எச்சக உயிரையும் அச்சறக் காத்தருள் அருட் பெருஞ்ஜோதி" (அகவல் 739/740) என்பார் வள்ளலார். சூரியன், சந்திரன், நெருப்பு (அக்னி) என்பவைகளை முதலாக, மூலப் பொருளாக வைத்து, எல்லா உலகிலுமுள்ள உயிர்களை அச்சம் என்பது சிறிதும் ஏற்படா வண்ணம் காத்து அருளாட்சி நடத்தி வருபவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்பது இவ்வரிகட்கு பொதுவான விளக்கம். நம்மைப் படைத்தவன் எதைக்கொண்டாவது நம்மைக் காப்பாற்றித் தானே ஆக வேண்டும் என்னும் வாதத்தை வைத்து அருட்பாவின் மணி முடியாய் காட்சி தரும் அகவலில் இந்த வரிகளை வைத்தது எதற்காக? "சகத்தே திருத்தி சன்மார்க்கம் அடைவித்திட" இது எப்படி துணை நிற்கும் எனும் போது:

இது வரை மாண்டவர்களின் உடலை மட்டும் நாம் புதைத்து அல்லது எரித்து விட்டோம். ஆனால் அதன் உள்ளேயிருந்து ஆன்மா எங்கே சென்றது என அறிந்தோமா? ஆன்மா அழியாது என்பது மட்டும் தெரியும். அதற்குப் புகலிடம் இப்போது எதுவாக இருக்கும்? வினைகட்கு தக்கவாறு அது சென்றது உண்மை.

(1) அளவற்ற பாவம் செய்திருந்தால் அது இப் பூமியிலுள்ள சந்து, பொந்து, இடுக்குகள், புற்றுகள், குகைகள் போன்ற இருளில், தனக்கு மீண்டும் ஏதாவது பிறவி கிடைக்கும் வரை, அடைந்து இருளே இருப்பிடமாய் கிடக்கும்.

(2) பாவ புண்ணியம் கலந்த வினை செய்திருப்பின் இப்புவியிலேயே அதற்கீடான பிறவிகளை எடுத்திருக்கும்.

(3) நல்வினையாற்றியிருந்தால், உடனே பிறவி பெறாமல் அந்த ஆன்ம அணு, வளி (காற்று) மண்டலத்தில் சஞ்சரித்து, விதிக்கப்பட்ட காலம் முடிந்தவுடன் மீண்டும் பிறவியெடுக்கும் (காலம் என்பது சில நாட்கள் முதல் பல நூறு ஆண்டுகள் கூட இருக்கும். இவர்களை தேவர்கள், உம்பர்கள் என்பர். இவர்கட்கு (கன்ம தேகம்) உடம்பு கிடையாது.

(4) அதிதீவிர முயற்சியால் மிகு புண்ணியம் செய்தவர்களின் ஆன்ம அணு சற்று பிரகாசமாய் வளி (ஆகாய) மண்டலத்தில், காற்று மண்டலத்திற்கு அப்பால் சஞ்சரிப்பர். இவர்கள் அம்பர் என்றும், ஐந்தொழிலான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் புரிபவரென்றும் சொல்வர்.

சென்ற மாத பத்திரிகை, செய்தி மூலம் பூமியிலிருந்து 40 ஒளியாண்டு தூரத்தில் (5 கோடி, கோடி கி.மீ) ஒரு சூரிய மண்டலம் இருப்பதும், அதிலுள்ள 7 கோள்களில் இரண்டினுள் உயிரினங்கள் வாழும் அறிகுறி இருப்பதாகவும் அறிந்திருப்பீர்கள். எனவே தான் வள்ளலார் "எண்ணியல் சக்தியால் எல்லா உலகினும் அண்ணுயிர்காத்தருள் அருட்பெருஞ்ஜோதி" (அகவல் 745/746) என்கிறார். வெவ்வேறு உலகங்கள் வெளிமண்டலத்தில் இருந்தாலும் அதைக் காப்பது ஆங்காங்கே உள்ள முச்சுடர் தான் என்கிறார். முச்சுடர் எப்படி எச்சகத்திலுமுள்ள உயிர்களை காக்கும்?

முச்சுடர் அமைந்த இடங்கள் (1) அகம் – பூமி (நெருப்பு) (2) புறம் – சந்திரன் (3) அகப்புறம் – சூரியன். இவைகளின் அமுதமும் பயனும் இதோ புற அமுது : "தேவரை யெல்லாம் திகழ்புற அமுதளித்து ஆவகை காத்தருள் அருட்பெருஞ்ஜோதி" (அகவல் 749 - 750). முன்பு சொல்லப்பட்ட வரிகளில் உம்பர் எனப்படும் தேவர்கள் என்பது உயிர் அணுக்களே. இவைகள் சந்திரனின் ஒளி அமுதத்தை உண்டு வாழ்பவையாகும். (சந்திரனின் ஒளியில் அல்லி மலர்கள் மலர்வது போல), மீண்டும் இவை பூமியில் பிறக்கும் வரை முச்சுடரில் ஒன்றான சந்திரன் தனது சுடரால் இவைகளை காக்கிறது.

அகப்புற அமுது : "அகப்புற அமுதளித்து ஐவராதிகளை அகப்படக் காத்தருள் அருட் பெருஞ்ஜோதி (751 / 752) முன்பு சொன்ன அம்பர் எனப்படும் ஐவராதிகள் சூரியனின் ஒளியை உண்டு ஜீவித்திருப்பர். தாமரை மலர் சூரியன் ஒளி கண்டு மலர்வது போல் இவ்வகையினர் சூரியனுக்கும் பூமிக்கும் இடைப்பட்ட இடத்திற்குள்ளே தான் சஞ்சரிக்க முடியும் என்பதால், அகப்படக் காத்து அருள்பவர் அருட்பெருஞ் ஜோதி என்பதை "ஐந்தொழில் ஆதி செய் ஐவராதிகளை, ஐந்தொழில் ஆதி செய் அருட்பெருஞ்ஜோதி" (363/364) எனத் தெளிவாக சொல்கிறார். முச்சுடரில் ஒன்றான சூரியன் தனது சுடரால் காத்தருள்வது இப்படியே.


அக அமுது : "தரும் அக அமுதால் சத்தி சத்தர்களை அருளினில் காக்கும் அருட்பெருஞ்ஜோதி" (753/754) பூமியில் விளைவது "அக அமுது" இதை கார்போ ஹைட்ரேட் என்பர். இது எரிபொருள். இதன் அளவை "கலோரி" என்று கணக்கிடுவர். ஒரு நாளைக்கு ஒரு மனிதன் எத்தனை கலோரி உணவு உட்கொள்ளலாம், நூறு கிராம் அரிசியில் எத்தனை கலோரி எரிபொருள் உள்ளது என்பதெல்லாம் உங்கட்கு தெரிந்ததுதான். முச்சுடரில் ஒன்றான நெருப்பு காத்தருள்வது முதலில் உடலைத்தான். அது ஒளியாகிய உயிரை வளர்க்கிறது என்பதை பதிவிளக்கம் இரண்டாவது பாடலில் "ஒளி வளர் உயிரே, உயிர் வளர் ஒளியே" என்பதாகக் காணலாம்.

உயிர்கள் முச்சுடரால் மட்டுமே காக்கப்படும் உண்மையை விளக்கியதன் நோக்கமென்ன? மறைந்த நம் முன்னோர்கள், தற்பொழுது வேறு பிறவி பெற்றோர் அல்லது தேவர்களாகவோ அதற்கு மேலாகவோ ஆன்ம வடிவில் அமுதூட்டப்பட்டுக் கொண்டு தான் இருப்பார். எனவே நாம் தரும் அமாவாசை, திதி, திவசம், பிண்டதானம், படையல் போன்றவைகளை அவ்வான்மாக்கள் ஏற்க வாய்ப்பில்லை. கருவிலே திருவானவர் வள்ளலார். அவர் தனது தந்தையாரின் திதிக்கு காலந்தாழ்த்தி வீட்டிற்கு வந்து உணவுண்டதை கண்ட அவரின் அண்ணியார் கண்ணீர் சிந்தினார் என்பதை வள்ளலார் சரித்திரம் சொல்கிறது. நமது பெற்றோரின் மீது நமக்கு மிகுதியான அன்பும் மரியாதையும் உண்டு. அவர்கள் முன்னறி தெய்வம் அவர்களின் நினைவு நாளில் வறியோரின் பசி போக்கி வாழ முற்படுவது சிறப்பு. இதை ஏற்பதும் விடுப்பதும் அவரவர் விருப்பம்!

**கே.என். உமாபதி**
கைபேசி : 95518 49757

**நாயினும் கடையேன் ஈயினும் இழிந்தேன்**
**ஆயினும் அருளிய அருட்பெருஞ்ஜோதி (306)**

# ஆன்மநேயப்பணியே அருந்தவப்பணி



கடந்த மூன்று ஆண்டுகளாக மாதந்தோறும் 27 வயதான அனகாபுத்தூர்
திரு. சேகர் அவர்களின் டயாலிஸிஸ் சிகிச்சைக்கான ரூ. 5000/-
மருத்துவ உதவி தருபவர் பேராசிரியர் எஸ். இராமநாதன் ஐ.ஐ.டி, சென்னை



கடந்த 6 ஆண்டுகளாக மாதந்தோறும் பார்வையற்ற, மாற்றுத்திறனாளி
குடும்பங்களுக்கு அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்குதல்.

# பெருவாழ்வு

இந்தச் சந்தர்ப்பத்திலே மரணமில்லாப் பெருவாழ்வு என்றால் என்ன என்பதைப் பற்றிச் சுருக்கமாகவும், அதே சமயம் கொஞ்சம் விளக்கமாகவும் விளங்கும் படியும் சொல்ல விரும்புகின்றேன். பொதுவாகச் சன்மார்க்க சங்க மேடைகளிலே சன்மார்க்க அன்பர்கள் மரணமிலா பெருவாழ்வு என்ற தலைப்பு பற்றி சொற்பொழிவு செய்வதைக் கேட்டு இருக்கின்றோம். அதில் ஐயா அவர்கள் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றுக் கொண்டதையும், அந்தப் பொருள் பற்றி ஐயா பாடியுள்ள நிறைய அருட்பா பாடல்களையும் எடுத்துக்காட்டாகக் காட்டிப் பேசுவதைக் காண முடிகின்றது. ஐயா அவர்கள் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றுக் கொண்டதைப் பற்றி தான் நமக்குக் கொஞ்சமேனும் சந்தேகம் இல்லையே! ஆக ஐயா அவர்கள் பெற்றுக் கொண்டதைப் போல், நாம் எப்படி பெற்றுக் கொள்வது என்பது தான் நமக்கு முக்கியமும், நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்பதை உணர வேண்டும். உதாரணமாக சாகாக்கல்வி என்ற நம்முடைய சுவாமிகள் எழுதிய நூலை ஒரு முறை நாம் படிக்கின்றோம் என்று வைத்துக் கொள்ளுவோம். அதன் உறு பயன், அதைப் படிப்பதின் குறிக்கோள், அடைவு என்ன என்றால் நாம் சாகாமல் இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து அடைந்து கொள்ள வேண்டும் என்பது தான்.

ஆக நம்முடைய 96 தத்துவங்களால் ஆகிய உடம்பு எந்தச் சூழ்நிலையிலும் மழை, குளிர், வெயில், அதிக காற்றுள்ள காலங்களிலும் நம்முடைய உடம்பு 98.4 டிகிரி உஷ்ண நிலை கொண்டும் எப்பொழுதும் போல் சுவாசித்துக் கொண்டும், இருதயமானது 72 முதல் 80 வரை துடித்துக் கொண்டும் இருக்கக்காரணம் நம்முடைய சிரநடுவிலே "ப" போன்ற எலும்புக் கூடாலான பிட்டியூட்டரி போசா என்ற கொஞ்சம் நன்னீருடன் கூடிய பீடத்திலே அதற்கு மேல் நிராதாரமாக ஒரு சிறு பட்டாணிக் கடலை போன்று பிட்டியுட்டரிக் கிளாண்ட் என்ற "The Master gland for all Ductless glands" என்ற ஒரு நாளமில்லாச் சுரப்பிகளின் தலைமைச் சுரப்பி தொங்கி விளங்கி நிற்கின்றது. இதிலிருந்து சுரக்கும் "ஹார்மோன்" என்று சொல்லப்படுகின்ற அமுதம் தான் மற்ற நாளமில்லாச் சுரப்பிகளை அதாவது தைராய்ட், அட்ரினலீன், பேன்கிரியஸ், ஓவரீஸ், டெஸ்டிஸ் போன்ற அமுதம் சுரக்கும் சுரப்பிகளை, தன் அதிகாரத்திற்கு உட்படுத்தி அதிகாரம் செய்து இந்த 96 தத்துவங்களால் ஆகிய உடம்பை ஒரு சீரான நல்ல நிலையில் இயங்கி வேலை செய்ய உதவி நிற்கின்றது. இந்தச் சிறிய பட்டாணி கடலை போன்ற பிட்டியூட்டரிக் கிளாண்ட் அகற்றப்பட்டால் மனித உடலுக்கு உயிர் நீங்கி விடும் என்ற அறிய வேண்டும். இது விஞ்ஞான அறிவியல் உண்மை. நான் டாக்டருக்குப் படித்து முடித்த ஒரு விவரமான டாக்டர் என்பதால் இதைச் சொல்கின்றேன். நம்முடைய ஐயா சொல்லும் சிரநடு சிற்றம்பலத்திலே பகர வடிவ ஞான பீடத்தே நிராதாரத்தில் ஆன்ம அணுவிலே அருள் ஆண்டவர் திருநடனம் புரிகின்றார் என்பது இந்த பிட்டியூட்டரி கிளாண்ட்டின் நடுவிலே ஆன்மாவிலே அருள் ஆண்டவர் விளங்குவதாகக் கொண்டு தெளிவது அருள் அறிவியல் உண்மை.

நம்முடைய ஐயா அவர்கள் சொல்லுகின்றார். மகனே இந்த பிட்டியூட்டரி சுரப்பியிலிருந்து பல வகையான அமுதங்கள் சுரந்து, பல நாளமில்லாச் சுரப்பியிலிருந்து

பல வகையான அமுதங்கள் சுரந்து, பலநாளிமில்லாச் சுரப்பிகளைத் தன் கைவசம் வைத்து அதிகாரம் செய்வதால் உன்னுடைய உடம்பு எந்தச் சூழ்நிலையிலும் ஒரு வரம்புக்கு உட்பட்டு நல்ல நிலையில் திகழ்ந்து வருகின்றது. ஆனால் நான் சொல்லுகின்ற படி நீ நடக்கத் தயாராக இருந்து அதன் படி நடந்தால் அந்த அமுதம் சுரக்கின்ற சுரப்பியிலே நீயும் மற்றவர்களும் கொஞ்சமும் எதிர்பார்த்திராத அருள் அமுதம் என்ற ஒரு தனிச் சிறப்புமிக்க அமுதம் சுரக்கும். இது யாருக்கும் சொல்லக் கூடாத மிக மிக ரகசியமான ஒன்று! ஏன் என்றால், இது மரணத்தைத் தவிர்க்கும் மிக அற்புதமான மருந்து. ஆனால் மகனே! என்னால் இதைச் சொல்லாமல் இருக்க முடியாது. காரணம் என் உடம்பு, உயிர், உணர்வு அத்தனையும் இரக்கத்தால் ஆனது. எனை அடுத்தார் சுகம் வாய்த்திடல் வேண்டும். ஏன் உரைத்தேன். இரக்கத்தால் உரைத்தேன் என்று இருப்பவன். ஆகவே என் அன்பான மகனே! நான் சொல்வதைக் கொஞ்சம் கவனமாகக் கேள். நான் சொல்லப் போகின்ற பத்தியம், கொஞ்சம் கடினமாகத் தோன்றும். ஆனால் இந்தப் பத்தியத்தைக் கைகொண்டால், நீ பெற்றுக் கொள்ளப் போவது 'இறவாமை' என்று அறிந்து கொள். ஆக நீ தீவிர ஜீவ தயா ஒழுக்க நிலையில் நின்று உலக அனுபவம், உயிர் அனுபவத்தைப் பெற, உன்னைப் புறம் சூழ்ந்து வந்து கொண்டுள்ள, புற உலகச் சூழலிலே எதிர்படுகின்ற எல்லா ஜீவராசிகள், பொருள்கள், தோற்றங்கள், ஆற்றல் செயல்கள், யோக ஞான அனுபவங்கள் மூலமாக நீ பெற்று தெளிவடைந்த மனத்திலே வேண்டுதல் வேண்டாமையற்று அவா வெகுளி அற்று, விருப்பு வெறுப்பு அற்று, நினைப்பு மறப்பு அற்று, மனம் சலித்தலும் சலனமும் இல்லாமல், ஒரு காற்று அறியாத் தீபம் போல் இருந்து ஓங்கார பீடத்தின் மேல் ஒரு வெண் தாமரையின் பொருட்டின் நடுவிலே அருள் ஒளியாக விளங்கி நிற்கும் அருள் ஆண்டவரை நான் பாடி நின்றது போல் உயிர் உணர்விலே:

"நினைத்த போதெல்லாம் நின்னையே நினைத்தேன்
நினைப்பற நின்ற போதெல்லாம் எனைத் தனியாக்கி
நின்கணே நின்றேன்"

என்றபடி துதித்து நிற்கும் பொழுது, என் பிரியமுள்ள மகனே! என்று மறுபடியும் அழைத்து, எப்பொழுதும் இல்லாமல் இந்தத் தருணத்திலே அருள் அமுதமானது சுரந்து பிட்டியூட்ரி போசா என்று சொல்லப்படும் பகரவடிவ ஞான பீடத்திலே உள்ள நன்னீரிலே சொட்டு சொட்டு என்று விழும்! இந்த அருள் அமுதமானது உடனடியாக இரத்தத்தின் மூலமாக மனித தேகத்தினுடைய ஒவ்வொரு செல்லுக்கும் எடுத்துச் செல்லப்படும். இந்த அருள் அமுதத்தைப் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு செல்லும் அதாவது அணுவும் இறவாமை பெற்றுக் கொள்ளுகின்றன. இது தான் மரணமில்லா பெரு வாழ்வு என்ற நிறை இன்ப இறை வாழ்வு என்று உண்மையான அறியப்பட வேண்டும் என்ற கூறுகின்றார். ஆக இந்த அருள் அமுதம் உடல் முழுவதும் வியாபித்து நிற்பதால் நம்முடைய தூல தேகம் சுத்த தேகமாகவும், சூட்சும தேகம் பிரணவ தேகமாகவும், காரண தேகம் ஞான தேகமாகவும் ஆக்கப்பட்டு விடுகின்றன! இதுவே திரிதேக சித்தி வாழ்வு என்றும் தெளிய வேண்டும்.

சின்னாளப்பட்டி Dr. V.B. சண்முகம், MBBS DAC
9042933181

# மக்கள் தொண்டே மகேசன் தொண்டு!!



வேலூர் மாவட்டம் சோளிங்கர் அருகே நந்திமங்களம் இராமாபுரம் கிராமத்தில் பசியாற்றுவிக்கும் சேவையில் தீபத்தின் நிர்வாகிகள்.



சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச் சாலையில் தினசரி நூற்றுக்கணக்கானோர் பசியாறும் அற்புதக்காட்சி.

# அருட்பெருஞ்சோதி அகவல்

## அனுபவப் பொருள் விளக்கம்

## திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

### ஓதாது உணர்தல்

23. ஓதா துணர்ந்திட ஒளியளித் தெனக்கே
24. ஆதார மாகிய அருட்பெருஞ் ஜோதி

கடவுள் உண்மையை அறிந்து அடையும் உயர் சிறப்பு கொண்டு விளங்குவது இம்மனிதப் பிறப்பு. ஆனால், உண்மை அறிவு, சாதாரண பொறிபுலன் அறிவுக்கும், மனோகரண அறிவுக்கும், ஜீவபோதப் பகுத்தறிவுக்கும் வெளிப்படாது. அவற்றிற்கெல்லாம் மேற்பட்டு உள்ளத்தொருமையில் ஆன்ம போதத்தில் ஒருவாறு வெளிப்பட்டு, மேல்தயவினால், அன்பினால் நெகிழ்ந்து உருககின்ற தருணம் தான் அவ் இறையருள் ஒளி சிறிது சிறிதாக வெளிப்படவுள்ளதாம். இதனால் தான் இது காறும் மக்கள் அறிவு பல துறைகளிலும் எவ்வளவோ தூரம் கடந்து சென்றும் கூட, இன்றளவும் இறையுண்மையைக் கண்டு கொள்ளவில்லையாம்.

ஓதுவது ஒழியேல் என்றும், ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம் என்றும் முன்னோர் கூறிவைத்தனர். ஓதல் என்றால் படித்தல் என்பர். அதாவது பிறர் உள்ளக் கருத்தைப் புரிந்து கொள்ளற்க உபாயமாக ஏற்பட்ட மொழியைப் பயின்று அறிந்து கொள்ளலாம். அப்படிப் பயின்று பெறும் அறிவு, படித்தறியும் விளக்கம் மேற்குறித்த அருள் உண்மையை எவ்விதத்தும் எவ்வளவும் உணர்த்தக்கூடியதாயில்லை. பன்னெடுங்காலம் முயன்று பயின்றும் அறிதற்கரியது அருட்பெரும்பதி உண்மை. படித்தறியக் கூடியதெல்லாம் வாச்சியப் பொருளேயன்றி இலட்சியப் பொருளல்லவாம். வாச்சியம் என்பது சொல்லினால் உரைக்கப்படுவது. இலட்சியம் என்பது முடிந்த குறிக்கோள் அனுபவப் பொருளாய் விளங்குவது கடவுளின் அருட்பேருண்மையைக் கருவி கரண இந்திரியங்களால், வாயுரையால், சொற்பொருளால் வெளிப்படுத்த முடியாதாம். ஆகையால் தான் அவ்வுண்மை வாச்சியப் பொருளல்ல எனப்பட்டது. வாச்சியமே ஓதப்படுவது; இலட்சியம் ஓதப்படாதது. ஆனால் அந்த ஓதப்படாத மெய்ப்பொருளிலிருந்து தான் ஓதப்படும் பொருள் யாவும் தோன்றுகின்றன. ஓதப்படாத அம்மெய்ப்பொருள்தான் உள்ளிருக்கும் அருட் ஜோதியாய், ஊமை எழுத்தாய், ஓங்காரத் துட் பொருளாய் விளங்ககின்றதாம். ஓங்காரத்துள்ளிருக்கும் இறையருட் சக்தியின் நாத ஒலி வெளிப்பட்டு ஓதல் செயலாய் விளங்குகின்றது. இப்போது ஓதல் என்றால் உள்வளர் ஊமை எழுத்தாம் ஓங்கார ஜோதியின் புறக் காரியப்பாடான ஒலிமொழியாக அறிவோம். இதனால் அவ்வோங்கார உண்மை கொண்டு விளங்கும் நூலுக்கு 'ஒத்து' என்ற சொல் வழங்கப்பட்டுள்ளதாம். ஒத்து என்றால் வேதம் என்பர். இதனை ஓதல், ஓதுவித்தல் முறையால், கர்ண பரம்பரையாக செவி வழி புகட்டப்பட வேண்டுமென்பது ஆன்றோர் கொள்கையாம்.

மேற்குறித்த ஓதல் முறையால் மட்டும் அருள் இறை உண்மையைக் கண்டுகொள்ள முடியாது என்பது அனுபவம். ஆகையால் வேதங்களும் இறைவனை அறிய மாட்டா என மொழிந்துள்ளனர். அருள் ஒளி ஒன்றினால் தான் அவ் இறைவனை அறியவும் முடியும். இதனைத்தான் நம் வள்ளற் பெருமான் உள்ளொளியாகப் பெற்று விளங்கினார் என்று உணர்த்தப் பெறு கின்றோம்.

# இடது கை



வலது கை கொடுப்பதை இடது கை அறியாமல் இருப்பது தருமம். தீபம் அறக்கட்டளையென்னும் நிலைக் கண்ணாடியில் நீங்கள் கொடுத்த தருமத்தை இடது கை என்ன செய்தது என்பதை கண்ணாடி காட்டுகிறது.

**கடந்த 8 ஆண்டுகளில் ...**

| | |
|---|---|
| உங்களால் பசிக்கு உணவு பெற்றவர்கள் | 25 லட்சம் பேர் |
| வசதி குறைந்த காப்பகங்கள், தானே / வர்தா புயல் நிவாரணம், போன்றவற்றிற்கு நீங்கள் தந்த அரிசி | 36 டன் |
| உங்களால் கல்வி உதவி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை பிப்ரவரி 2017 வரை | 664 பேர் |
| நீங்கள் அளித்த கல்வி உதவித் தொகை | ரூ. 35,61,956/- |
| மார்கழி மாதக் குளிரில் சுருண்டு பரட்டை தலையுடன் ரோடோரம் தரையில் படுத்திருந்தவர்களை பாதி இரவில் எழுப்பி நீங்கள் அளித்த போர்வைகள் மற்றும் புத்தாடைகளின் எண்ணிக்கை | 12, 500 |
| ஏழைகளின் நோய் தீர மருத்துவ உதவியாக நீங்கள் வழங்கிய தருமம் | ரூ. 12,50,000/- |
| தீபநெறி மாத இதழ் உங்களால் வெளியிடப்படுவதை விரும்பிப் பெறுவோர் | இதுவரை 2.60 லட்சம் பிரதிகள் |

பணம் கொடுத்தது - உங்கள் வலது கை

புள்ளி விவரம் தருவது - உங்களது இடது கை (தீபம் அறக்கட்டளை)

---

## தருமம் செய்வோம்! தயவுடன் வாழ்வோம்!!

# மனித குல சேவையே, கடவுள் சேவை



அன்னம் வேண்டும் கைகளும்; அரவணைக்கும் கைகளும்.



தீபம் அறக்கட்டளையின் ஆன்மநேய அறப்பணிகளில் ஒன்றான
வறியவர்களுக்கு குளிருக்கு இதமான போர்வை அளிக்கப்படும் காட்சி.

# உள்ளும் புறமும்

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்"

வள்ளலார் ஆண்டவனிடத்தே வைத்திட்ட விண்ணப்பம் நம்முன்னோர்க்கு, இது வள்ளலார் இட்ட கட்டளை. இந்த உத்தரவைக் கூட நம்மால் ஏற்க முடியவில்லையே ஏன் ? இதனை ஏற்று நடப்பதில் சில சிரமங்களை சந்திக்க வேண்டியிருந்தது – இருக்கிறது – இருக்கும் என்று மனிதன் கற்பனை சமாதானங்களைச் சொல்லக்கூடும். ஆனால், இதனை ஏற்று நடவாததனால் இந்த சமுதாயம் சந்தித்துக் கொண்டிருக்கிற சங்கடங்கள் – சஞ்சலங்கள் ஏராளம் – ஏராளம், விரிவாக சிந்திப்போம்:

பொய்யுரை பேசாதோர், புனைந்துரை புகலாதோர், முகஸ் துதி மொழியாதோர் எங்கோ ஓரிருவர் இருப்பரா ?

"பொய்யுடை ஒருவன் மெய் போலும் மே,
மெய் போலும் மே"

"நினைவுகளை அப்படியே வெளியே கொட்டி விடமுடியுமா? செம்மைபடுத்தி நல்லுரைகளாகத்தானே வெளியிட முடியுமா? செம்மைப்படுத்தி நல்லுரைகளாகத்தானே வெளியிட வேண்டும்" என்று சாதுர்யம் பேசுவோரும் உண்டு.

சாமர்த்தியமான வாக்கு வண்மையெனவும் பாராட்டுக்குரியதாக ஏற்கபடும் நிலையைக்கூட பலரது பொய்யுரை பெற்று வருவதையும் காண்கிறோம்.

பெருவாரியான மக்கள், தங்களைக்காத்துக்கொள்ளும் கவசமாக, அநீதியை அரியணை ஏற்றும் ஆயுதமாகவல்லவா, கொஞ்சங்கூட குற்ற உணர்வே இல்லாமல் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை நமது சமுதாயத்திற்கு ஏற்படக் காரணம்? பொய்ம்மை தொடர்ந்து வெல்கிறதா? விரைந்து பயன் தருகிறதா? பிரச்சினைகட்கு உடனடித் தீர்வு தருகிறதா??

நிரந்தர விளைவுகளை விரிவாகச் சிந்தியாமல் அவரவர்க்கு ஏற்பட்ட தற்காலிக நிர்பந்தங்களாலும் அதிக உழைப்பின்றி அடைந்திட்ட சுகானுபவங்களாலும் தருமன் பார்த்துச் சொன்ன புனைந்துனார்கள். பெரிய, பெரிய நன்மைகள் தந்துவிட்டதாக நம்பி, நம்பி இன்றைய சமுதாயம் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுதலை ஒரு கலையாகவே வளர்த்துப் பெருமிதப்பட்டுக்கொள்கிறது.

அகத்தே கறுத்து, புறத்தே வெளுத்து கோலம் காட்டிடுவோர் தமது அறிவுத்திறனென்று மகிழலாம். ஆனால், அகத்தே கறுத்தது வெளியேறி ஆக வேண்டுமே! உள்ளேயே தங்கினால், உள்ளே இருக்கும் உற பொருள் என்னவாகும்? உள் உறுப்புகள் அத்தனையும் என்னாகும்? வடிகட்டிய அறியாமை என்று எப்போது உணருவோம் !

தெருள்நிலைஇது எனத்தெருட்டி என்னுளத்திருந்து
அருள்நிலை காட்டிய அருட்பெருஞ்ஜோதி (322)

அகத்தது நல்லுகார் வாயின் அது புறத்தே வெளிப்படும் போது கிட்டிடும் மன நிறைவை அனுபவித்திருக்கிறீர்களா?

“நன்றே நினைமின், நமனில்லை” – நன்றே நினைப்பின் நமனில்லை – மரணம் இல்லை – வள்ளலாரின் மரணமிலாப் பெருவாழ்வுக் கோட்பாட்டின் அடித்தளமே இவ்வரிகள் தான் என எண்ணத்தோன்றுகிறது.

எண்ணங்கள் தானே வாழ்க்கை – உதிக்கின்ற எண்ணங்கள் அனைத்தும் நல்லனவாக – நலம் பயப்பவனாக வெளிப்படும் வார்த்தைகள் அனைத்தும் இன்னுரைகளாக, இனியவைகளையே நல்குவனவாக அமைந்திட்டால் அந்த மனிதனுக்கு மரணமேது?

வள்ளலார் போல் – அன்னை தெரசா போல் – இன்ன பிற அருளாளர்கள் போல் எக்காலமும் வாழ்கின்ற பெரும் பேறல்லவா வாய்த்திடும்.

நல்லெண்ணங்களின் அடர்த்தி நம்மைச் சூழ்ந்து ஒரு கவசம் போல் காத்திடும். உடல் தளர்வால், மரணம் நிகழலாம். மரணம் ஒரு நிகழ்வாக மட்டுமே அமையும். ஆன்மாவின் நலம் பயக்கும் நல்லெண்ணப்பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

அண்ணாமலை தகவல் பரிமாற்றம் பற்றிய ஒரு ஆய்வுக்கட்டுரை படித்தேன்.

மக்களிடையே நிகழ்ந்து கொண்டிருக்கும் தகவல் பரிமாற்றங்களை வகைப்படுத்தி அவைகளின் அளவை நிர்ணயித்துள்ளனர்.

1. அர்த்தமற்ற உளறல்கள்: 10 முதல் 15%
2. சத்தற்ற பயனற்ற உரையாடல்கள் : 50%
3. பொருள் பொதிந்த போதனைகள் – 10 முதல் 15%
4. நினைவில் நிற்காத பொழுதுபோக்கு 20%

நீங்களே இந்த முடிவுகள் பற்றி சற்று ஆழ்ந்து சிந்தித்தால் உங்களுக்கே பல உண்மைகள் புலனாகும். சிந்தித்துப்பாருங்கள் உங்கள் செயல், உங்கள் உறவு, நட்பு – சுற்றம் என உங்கட்கு அறிமுகமான அனைத்து நபர்களின் செயற்பாடுகளை கூற்றுகளை ஆய்வு செய்து பாருங்கள். அங்கே ஒளிந்து கொண்டு எதிர்மறைகளை அரங்கேற்றிக்கொண்டிருப்பது பொய்மை என்பது விளங்கும்.

நீதியைக்காக்க நீதி மன்றங்கள் திணறுவது ஏன்? தேங்கி நிற்கும் வழக்குகளின் எண்ணிக்கை நமக்கு சொல்லும் செய்தி யாது?

நிரபராதிகளைக் காத்திடவும், நீதியை நிலைநிறுத்திடவும் உறுதி ஏற்று தொழில் துவங்கும் ஒரு பெரும் பிரிவினர் “புரை தீர்ந்த நன்மை பயக்கவே, நாங்கள் அவ்வப்போது தக்க தருணங்களில் பொய்மையை பயன்படுத்துகிறோம்” என்று பறை சாற்றுகிறார்கள். நடைமுறையில் நம் அனுபவங்கள் நேர் எதிரிடையாக அல்லவோ உள்ளது.

சிலர் மட்டும், நேர்மையைத் தேடித் தேடி களைத்துப் போகிறார்கள் என்பதும் உண்மை. உண்மை வெல்லும் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு தங்களை உற்சாகப்படுத்திக்

கொள்கிறார்களேயன்றி, "அதர்மத்தை – அநியாயத்தை" இது காலத்தின் கட்டாயம் என்று ஏற்றுக் கொண்டு வாழ்கிறவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போவது நிதர்சனம்.

இன்றைய சமுதாயச்சீர் கேட்டிற்கு முழுமுதற்காரணம்:

நடுவிகந்தான் ஆக்கம்

இந்த அருவருக்கத்தக்க சீர்கேட்டினை ஊக்குவிப்பது தொற்று நோய் போல் விரைந்து பரப்பிடும் இழி செயல் பொய் புகழல் புனைந்துரைத்தல்.

இந்த இரண்டு பயங்கர ஆயுதங்களை வைத்துக் கொண்டு நேர்மையையும், நியாயத்தையும் ஓட ஓட விரட்டி விட்டோம். விரட்டிக் கொண்டிருப்பவர்கள் வல்லுனர்களாக மதிக்கப்படுகிறார்கள்.

வரி ஏய்ப்புக்கு வழிகாட்டுபவன் – பாமரனா ? பண்டிதனா ?<br>
வழக்குகளை தாமதிக்க வைப்பவன் – பாமரனா ? பண்டிதனா ?<br>
பெருந்தொகையைப் பெறுபவன் – பாமரனா ? பண்டிதனா ?<br>
ஊழலின் ஊற்றுக் கண் யார் – பாமரனா ? பண்டிதனா ?

இவையெல்லாமே எங்கட்கும் தெரியும். இவைகளை செய்ய இயலாத பாமரன் – கொஞ்சம் படித்தவன் என்ன தான் செய்யலாம். சொல்லுங்களேன் ! ஒன்று சொல்வேன்.

"பொய் புகலேன் – புனைந்துரையேன்" உள்ளும் – புறமும் தூய்மைகாப்பேன் என இக்கணம் உறுதி பூணுங்கள். ஒத்த கருத்துடைய ஒருவரிடமாவது இந்த விண்ணப்பத்தை பகிர்ந்து கொள்ளுங்கள். அது போதும் வள்ளலார் வழிகாட்டுவார் !!

**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை /8056438488

சென்னை வேளச்சேரி

## நித்ய தீப தருமச்சாலை

கடந்த 8 ஆண்டுகளாக தினசரி நூற்றுக்கணக்கானவர்களின் பசியைப் போக்கக் கூடிய நித்ய தீப அன்ன தருமச்சாலைக்கு வருகை தந்து, ஜோதி தரிசனம், மாத பூச நாளில் 6 திரை நீக்கி ஜோதி தரிசனம் செய்து, அருளின்பம் பெற தங்களையும், தங்கள் குடும்பத்தையும் அன்புடன் அழைக்கிறோம்!

**அடுத்த மாத பூச ஜோதி தரிசனம்**
**05.04.2017 (புதன்கிழமை) இரவு 8.00 மணிக்கு**
**இடம் : நித்ய தீப தருமச்சாலை**

7/8, புத்தேரிக்கரைத் தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை – 600 042

**உருள்சகடு ஆகிய உளஞ்சலியாவகை**
**அருள்வழி நிறுத்திய அருட்பெருஞ்ஜோதி (326)**

# தருமமும் ஆன்மநேயமும் தீபத்தின் இரு கண்கள்




நித்ய தீப தருமச் சாலையில் துப்புரவு பணி செய்யும் பெண் ஒருவருக்கு புத்தாடை வழங்கி மகிழ்விக்கும் தயவு. மின்னல் அம்மா.



சென்னை வேளச்சேரி, கல்குட்டை தருமச்சாலைக்கு கஞ்சி வார்க்க சமையல் கேஸ் அடுப்பு மற்றும் பாத்திரங்கள் வழங்குதல்.

வெருள்மன மாயை வினைஇருள் நீக்கிஉள்
அருள் விளக்கேற்றிய அருட்பெருஞ்ஜோதி (328)

# தழைக்கும் சன்மார்க்கம்
# அறம் செய விரும்பு

பல சிறப்புகளை ஒருங்கே கொண்ட ஊர்களில் திண்டுக்கல் என்பதும் ஒன்று. இவ்வூரை சித்தர்களின் பூமி என சித்தரிப்பதும் உண்டு. இங்கு 1938ம் ஆண்டு தொடங்கப்பட்ட "அருட்பெருஞ்ஜோதி சன்மார்க்க சங்கம்" பின்னாளில் பதிவு செய்யப்பட்டு 1950ம் ஆண்டு முதல் அவ்வூர் மலையடிவாரத்தில் அமைந்து மிகச்சிறப்பாக இயங்கி வருகிறது. தவத்திரு சத்தியஞான சபாபதி சுவாமிகள் ஆசியாலும், தயவாளர்கள் கிருஷ்ணானந்தர், வடிவேலனார், பழநி வேலனார், சுப்ரமணியனார், சென்னையில் வாழ்ந்த சுந்தரனார் போன்றவர்களின் பெருமுயற்சியால் இவ்வளாகத்துள் சிற்சபை, பொற்சபை, சத்திய ஞான சபை, கொடிமரம், வள்ளலார் திருக்கோயில், சங்க அறை, கிணறு, சுற்றுச்சுவர் என பலவற்றை இன்றும் காணமுடிகிறது. தயவாளர்கள் சுத்தானந்த பாரதியார், கிருபானந்தவாரியார் போன்றவர்களின் சொற்பொழிவுகள் நிகழ்ந்ததுடன் சன்மார்க்க மாநாடுகளையும் நடத்தியது இச்சங்கம்!

79 ஆண்டுகளை நிறைவு செய்யும் இச்சங்கம், 1993ல் திரை நீக்கி ஜோதி தரிசனம் காட்ட துவங்கியது. ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை மாலையில் பல சான்றோர்களை அழைத்து சொற்பொழிவு நிகழ்த்துகிறது. இதற்கு முதற்காரணமாய் இருந்தவர் திருவாளர் சமயபுரத்தான் ஆவார். கடந்த 15 ஆண்டுகளாக வசதியற்ற மாணவ. மாணவியர் 70 பேருக்கு இரண்டு ஆசிரியைகளைக் கொண்டு சிறப்பு (TUITION) வகுப்புகள் மாலை 6 முதல் 8 மணி வரை சங்க வளாகத்தில் நடத்துகிறது. அதற்கான உபகரணங்களையும் சங்கம் வழங்குகிறது. தினசரி காலை 8 மணிக்கு மூலிகை கலந்த கஞ்சி நூறு பேருக்கு வழங்கப்படுகிறது. தினமும் பகல் 11 மணிக்கு சமைத்த கலவை சாதத்தை ஒரு ஊர்தியில் ஏற்றி (நடமாடும் தருமச்சாலை) வீதிகளில் முடங்கி கிடக்கும் முதியோர், வசதியற்றோர், பிணியுற்றோர்கட்கு (100 பேர் அளவில்) தரப்படுகிறது. மாதப்பூசத்தன்று மாலை கூட்டு வழிபாடு நடக்கிறது. கடந்த 18 ஆண்டுகளாக இம்மாவட்டத்திலுள்ள பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவச் செல்வங்கட்கு திருவருட்பா பாட்டு, கட்டுரை, பேச்சுப்போட்டி நடத்தப்பட்டு தைப்பூச தினத்தன்று அவர்கட்கு பரிசளிக்கப்படுகிறது. அதற்காக சங்கத்திற்கு தலைமையேற்று நடத்தியவர்கள் தயவு பொ.நடராஜன், ஜி. இராமச்சந்திரன், எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி போன்றோர் ஆவர். இவ்வூரும் இம்மாவட்டமும் இச்சங்கத்தால் பயனடைவது உண்மை.

இந்த திண்டுக்கல் மண்ணின் வாசனையை உலகெங்கிலுமுள்ள பல சன்மார்க்க சபைகளின் நாசியும் நுகர்வது உண்மை. அதற்கு காரணம் "திண்டுக்கல் தயாநிதி சரவணானந்த சுவாமி" (1910 - 2006) ஆவார். சன்மார்க்கத்திற்கு இவர் ஆற்றிய பணி

அளப்பரியது. இந்த சன்மார்க்க யோகி எழுதிய எழுபதிற்கும் மேற்பட்ட நூல்கள் அச்சாகி சன்மார்க்கத்தை உலகெங்கும் பரப்பியிருக்கிறது. இன்னும் நாற்பது புத்தகங்கள் அச்சேறவுள்ளன. அனைத்தும் அருட்பாவையும் வள்ளலாரைப் பற்றியுமான சன்மார்க்க ஞானக்கருவூலங்கள். அருட்பெருஞ்ஜோதி அகவலுக்கு அனுபவ பொருள் விளக்க உரை மிக அருமையான வெளியீடாகும். ஆன்மீக எழுத்துக்கள் என்பது பக்தி மார்க்கத்தின் விரிவாகவே இருக்கும். ஆனால் இவரின் படைப்புகள் அகவுண்மையை பறைசாற்றுகிறது. அது திண்டுக்கல் மண்ணின் சிறப்பு! இவரின் நிழலாக இப்போது பார்க்க வேண்டுமானால் பலரை சான்று காட்டலாம். சிந்தனையிலும், எழுத்திலும், சின்னாளப்பட்டி Dr. V.B. சண்முகம் MBBS DAC அதில் ஒருவர் என்றால் அது மிகையல்ல. தயவு தயவு என்கிறார்களோ அது என்ன? அதுவா – திண்டுக்கல் மேடா. நித்தியானந்தம் அய்யாவை பாருங்கள் என்றால் அதுவும் மிகையல்ல. சன்மார்க்க சொற்பொழிவாளர்கள், பாடகர்கள், சன்மார்க்க மாத இதழ் நடத்துபவர்கள், சன்மார்க்க சங்கம் நடத்துபவர்கள், சன்மார்க்க செயல்வீரர்கள் போன்றவர்களை ஊக்குவிப்பதில் இவருக்கு அதிக ஆர்வமுண்டு. காரணம் திண்டுக்கல் மண்! சுவாமி சரவணானந்தரின் பல நூல்களை வெளியிட்டவரும் இவரே.

இத்தனைக்கும் மேலாக பல செயல்புரியும் இச்சங்கத்தினை தொடர்பு கொள்ள :

தயவு **மேடா B. நித்தியானந்தம்**, கௌரவ தலைவர்
தயவு O. **சந்திரன்**, தலைவர்
தொடர்பு எண். 9842133866

---

# தீபநெறி

தீபநெறி இதழ் குறித்த தங்களின் கருத்துக்களை, மேலான ஆலோசனைகளை, கட்டுரை ஆசிரியர்களுக்கு கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்கலாம்.

## விளம்பரங்களில்லா, விலையில்லா மாத இதழ்

## தீபநெறி மாதஇதழ்

தங்களின் நலம் விரும்பிகளுக்கு அனுப்ப / பெற
முகவரி மாற்றம் தெரிவிக்க **9444073635** என்ற எண்ணுக்கு
**முகவரியை** SMS / Whatsapp செய்யவும்.

# நித்ய தீப தருமச்சாலை

**கடந்த 8 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான**
**பசியால் வாடும் வறியவர்களுக்கு, 7 தருமச்சாலைகள் மூலம்**

# அன்னம் பாலிப்பு




**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து**
**நீங்களும் அருளின்பம் பெற வாருங்கள்!**
**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ. 3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ. 5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ. 6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| 7 தருமச் சாலைகளிலும் அன்னமளிக்க | ரூ. 10, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 1,00,000/- |

**முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும்:**

# 94440 73635 / 2244 2515

Donations may be sent by crossed cheque to :

## Deepam Trust

No. 30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

**State Bank of India, IIT Branch, DEEPAM TRUST**
**Current A/c. No. : 30265475129 / IFSC Code : SBIN0001055**

**அருட்பேர் தரித்து உலகனைத்தும் மலர்ந்திட**
**அருட்சீர் அளித்த அருட்பெருஞ்ஜோதி (334)**

**சென்னை முடிச்சூர் ஆதீஸ்வரர் காப்பக குழந்தைகளுக்கு புத்தாடைகள் தந்து,
மசால் தோசை உணவளித்து, ஆடிப்பாடி மகிழ்வித்த காட்சி.
உபயம் : பேராசிரியர் திருமதி. மீனா பாபு அவர்கள்**











# நல்லோர் உள்ளம் இறைவனின் இல்லம்!



நித்ய தீப தருமச்சாலையில் தினசரி தயாராகும் அறுசுவை உணவிற்கு காய்கறிகளை நறுக்கும் தீபத்தின் தன்னார்வ தொண்டர்கள்.




நித்ய தீப தருமச்சாலைக்கு தினசரி வருகை தரும் பசுவிற்கு உணவளிக்கும் தீபத்தின் ஆடுகின்ற சேவடி தயவு. காந்தி அவர்கள்.

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம்

வடலூர், கடலூர் மாவட்டம்

## மாத பூச ஜோதி தரிசன திருநாட்குறிப்பு : 2017-2018

| தமிழ் மாதம் | நாள் | ஆங்கில நாள் | கிழமை | விழா விபரம் |
|---|---|---|---|---|
| சித்திரை | 19 | 02.05.2017 | செவ்வாய் | மாதப்பூசம் |
| வைகாசி | 11 | 25.05.2017 | வியாழன் | **தருமச்சாலை துவக்க நாள்** |
| வைகாசி | 15 | 29.05.2017 | திங்கள் | மாதப்பூசம் |
| ஆனி | 12 | 26.06.2017 | திங்கள் | மாதப்பூசம் |
| ஆடி | 07 | 23.07.2017 | ஞாயிறு | மாதப்பூசம் |
| ஆவனி | 03 | 19.08.2017 | சனி | மாதப்பூசம் |
| ஆவனி | 31 | 16.09.2017 | சனி | மாதப்பூசம் |
| புரட்டாசி | 19 | 05.10.2017 | வியாழன் | **வள்ளலார் வருவிக்க உற்றநாள்** |
| புரட்டாசி | 27 | 13.10.2017 | வெள்ளி | மாதப்பூசம் |
| ஐப்பசி | 07 | 24.10.2017 | செவ்வாய் | **சித்திவளாகம் கொடி கட்டுதல்** |
| ஐப்பசி | 23 | 09.11.2017 | வியாழன் | மாதப்பூசம் |
| கார்த்திகை | 21 | 07.12.2017 | வியாழன் | மாதப்பூசம் |
| மார்கழி | 19 | 03.01.2018 | புதன் | மாதப்பூசம் |
| தை | 17 | 30.01.2018 | செவ்வாய் | **கொடியேற்றம்** |
| தை | 18 | 31.01.2018 | புதன் | **தைப்பூசப் பெருவிழா** |
| தை | 20 | 02.02.2018 | வெள்ளி | **சித்திவளாகத் திருஅறை தரிசனம்** |
| மாசி | 15 | 27.02.2018 | செவ்வாய் | மாதப்பூசம் |
| பங்குனி | 12 | 26.03.2018 | திங்கள் | மாதப்பூசம் |

**விண்உறு விண்ணாய் விண்நிலை விண்ணாய்**
**அண்ணி வயங்கும் அருட்பெருஞ்ஜோதி (340)**

# பசித்தோர் முகத்தை பாராதிருந்தேனோ?



நடமாடும் நித்ய தீப தரும சாலை மூலமாக தினசரி நூற்றுக்கணக்கானவர்களுக்கு பசியாற்றுவிக்கும் சேவையில் தயவு. கோபால் மற்றும் அயர்ன் ரமேஷ் அவர்கள்.





நடமாடும் நித்ய தீப தரும சாலை மூலமாக அறுசுவை உணவு வகைகளை பசியாறும் பாலமனம் மாறாத பச்சிளம் பிஞ்சுக் குழந்தைகள்.

RNI : TNTAM/2010/35284 R.No.TN/CC(S)Dn/412/17-19
"REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT
UNDER WPP NO.TN/PMG/(CCR) / WPP-290/2017-2019
Posted at Patrika Channel, Egmore, Chennai - 8. | Date of Publication : 20th of Every Month

## சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச் சாலையில்
## தயாரான அறுசுவை உணவு பதார்த்தங்களுடன் ஆடுகின்ற சேவடிகள்



To
Shri / Smt / Dr

Posted at Patrika Channel
Posted on 27-3-2017
Egmore, Chennai - 8

If undelivered Please Return to :

# DEEPAM TRUST

(REDG. No. - 2035/07)

No. 30, Drowapathi Amman Koil Street (Next to Mosque), Velachery, Chennai - 600 042. Phone : 044 - 2244 2515
Cell : 94440 73635 | E-mail : admin@deepamtrust.in | Web : www.deepamtrust.in

Published by : M. Balakrishnan on behalf of Deepam Trust,
No.30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and
Printed by RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015.
Editor : M. Balakrishnan